## இந்த ஆண்டு ரூ.300 கோடியில் ஏரி, குளங்கள் ஆழப்படுத்தப்படும்

# காலிங்கராயன் பிறந்தநாள் அரசு விழாவாக கொண்டாடப்படும்

## மணி மண்டப திறப்பு விழாவில் முதல்வர் அறிவிப்பு



ஈரோடு அருகே காலிங்கராயன்பாளையத்தில் காலிங்கராயனுக்கு மணிமண்டபத்துடன் அமைக்கப்பட்டுள்ள சிலையை தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி நேற்று திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.அருகில் அமைச்சர் செங்கோட்டையன்.

ஈரோடு, மே 14: ஈரோடு மாவட்டம் பவானி காலிங்கராயன்பாளையத்தில் ரூ.1.50 கோடி செலவில் காலிங்கராயனுக்கு மணி மண்டபம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழாவில் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி நேற்று பங்கேற்று மணி மண்டபம் மற்றும் காலிங்கராயன் சிலையை திறந்து வைத்தார்.

இதை தொடர்ந்து பவானி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடந்த விழாவில் கலந்து கொண்டு ரூ. 166 கோடி மதிப்பிலான திட்டப்பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசியதாவது:

இந்தப்பள்ளியில் நான் கடந்த 1967ம் ஆண்டு ஆறாம் வகுப்பு முதல் 11ம் வகுப்பு வரையிலும் படித்தேன். என்னுடைய டிரில் மாஸ்டர் முத்துசாமி பல மாணவர்களின் உயர்வுக்கு காரணமாக இருந்தவர். இப்பள்ளியில் பயின்றது எனது பொற்காலம். நல் உள்ளம் கொண்ட பல ஆசிரியர்கள் இப்பள்ளியில் இருந்தனர். தற்போது தமிழக முதல்வராக என்னை உருவாக்கிய பெருமை இப்பள்ளியையே சாரும்.

முதல்வராக ஜெயலலிதா இருந்த 2011-16ம் ஆண்டு காலத்தில் தமிழகத்தில் புதிதாக 221 தொடக்கப்பள்ளி துவங்கப்பட்டது. இன்று இந்தியாவிலேயே அதிக பள்ளி உள்ள மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. பல்வேறு இடங்களிலும் பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. பள்ளி மாணவர்களுக்கு சீருடை, மணிக்கணினி என 16 வகையான பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பாடத்திட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்படுகிறது. இந்த ஆண்டு 4 வகுப்புகளுக்கும், அடுத்த ஆண்டில் 8 வகுப்புகளுக்கும் பாடத்திட்டத்தில் மாற்றம் செய்யப்படுகிறது.

பவானியையும், நொய்யல் ஆற்றையும் இணைத்து நதி நீர் இணைப்புக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே முன்னோடியாக திகழ்ந்தவர் காலிங்கராயன். காலிங்கராயனுக்கு மரியாதை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் கடந்த 2016ம் ஆண்டு ரூ.1.65 கோடி செலவில் மணி மண்டபம் கட்டப்படும் என்று சட்டப்பேரவையில் ஜெயலலிதா அறிவித்தார். ஜெயலலிதா அறிவித்த சிலையை நான் திறந்து வைப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இனி ஒவ்வொரு ஆண்டும் காலிங்கராயன் பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று இந்த விழாவின் மூலம் தெரிவித்து கொள்கிறேன்.

தமிழகத்தில் கடந்த 2011ம் ஆண்டு முதல் 18ம் ஆண்டு வரை பல நூறு கோடி ரூபாய் செலவில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாநகரில் ரூ.64 கோடி செலவில் புதிய மேம்பாலம் கட்டும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் விரிவாக்க கட்டிடம் கட்டும் பணிக்கு விரைவில் ஒப்பந்தப்புள்ளி விடப்படும்.

ஈரோடு ரிங் ரோடு மூலம் சாலை விரிவாக்கப்பணிகளும் தீவிரமாக நடந்து வருகிறது. பவானி-மேட்டூர் ரோடு, மேட்டூர்- தொப்பூர் ரோடு 40 மீட்டர் அகலத்தில் 4 வழிச்சாலையாக மாற்றப்படும். மேட்டுப்பாளையம்- சத்தி, சத்தி-பவானி, சத்தி-சித்தோடு, ஈரோடு- கரூர், ஈரோடு-திருச்செங்கோடு வரை 4 வழிச்சாலை அமைக்கும் பணியும் நடைபெற உள்ளது. இதன் மூலம் சாலை விபத்துகளின் எண்ணிக்கை குறைவதுடன், நெரிசல் குறையும்.

இதுவரை குடிமராமத்து திட்டத்தின் கீழ் 15019 ஏரி, குளங்கள் தூர்வாரி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 15011 ஏரிகள் குடிமராமத்து பணிகள் மேற்கொள்ள இடம் தேர்வு செய்யப்பட்டு, கரைகள் பலப்படுத்தி, ஆழப்படுத்தப்பட உள்ளது.

இப்பணிகள் அனைத்தையும் விவசாய சங்கங்களிடம் வழங்கி, வண்டல் மண்ணை எடுத்து ஏரி, குளங்கள் ஆழப்படுத்தப்படும். இதுவரை குடிமராமத்துப்பணிக்காக ரூ.1000 கோடி செலவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ரூ.300 கோடி செலவில் ஏரி, குளங்கள் ஆழப்படுத்தப்படும். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி பேசினார்.

**பெருந்துறை எம்எல்ஏ புறக்கணிப்பு:** முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி பங்கேற்ற பவானி விழாவில் பெருந்துறை தொகுதி எம்எல்ஏ தோப்பு வெங்கசாலம் பங்கேற்கவில்லை. அவர், வேண்டுமென்றே புறக்கணித்ததாக அதிமுகவினர் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்டது. பெருந்துறை தொகுதிக்குத் தேவையான நலத்திட்டங்கள் அறிவிக்கப்படாததால் அவர் அதிருப்தியில் உள்ளதாகவும் கூறப்படுகிறது.